**IN THE COURT OF THE SUB JUDGE, DENKANIKOTTAI**

**O.S.No. 91 /2022**

Deposition of witness **DW1** for Defendant and solemnly affirmed and oath for sworn taken file by Tr. R.Sankar, Gr.II Bench Clerk in accordance with the provisions of Act 1975.

| | | | |
|---|---|---|---|
| Name | : M.Thendral | Father's Name | : Mari |
| Village | : | Taluk | : Denkanikottai |
| Caste | : | Calling | : |
| Religion | : Hindu | Age | : |

**நாள்:08.12.2023**

**பிரதிவாதி முதல் விசாரணை:**

நான் இந்த வழக்கில் 1–ம் பிரதிவாதி. பி.வா.சா.1 ஆக இருந்து எனது முதன்மை சாட்சிய பிரமாண பத்திரிக்கையை தாக்கல் செய்கிறேன். அதனை சாட்சியமாக ஏற்க வேண்டுகிறேன். தாவா தள்ளுபடி ஆக வேண்டுகிறேன்.

**குறுக்கு விசாரணை**

3 ம் பிரதிவாதியின் சார்பாகவும் முதல் விசாரணை தாக்கல் செய்துள்ளேன். 3 ம் பிரதிவாதி எங்களது உயர் அதிகாரி. என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ.2 பிரதிவாதி பாக்கியா சார் பதிவாளர் அலுவலகத்திற்கு ஆவணம் பதிவும் செய்யும் போது வராததால் அந்த ஆவணம் பதிவு செய்யப்படாமல் திருப்பப்பட்டுள்ளது என்றால் ஆமாம். வா.சா.ஆ.2 ல் குறிப்பிட்டுள்ள சங்கதிக்கு முந்தைய பத்திரம் வா.சா.ஆ.1 என்றால் அது என்னால் சொல்லமுடியாது அதை வா.சா.ஆ.2 ல் குறிப்பிடவில்லை. பாக்கியாவிற்கு நாங்கள் அறிவிப்பு அனுப்பியதற்கும் அவரை விசாரணை செய்ததற்குமான ஆவணங்கள் எதையும் நான் இந்த நீதிமன்றத்திற்கு எடுத்து வரவில்லை. ஆவணத்தில் உள்ளது பாக்கியாவின் கையெழுத்து தானா என்பதை ஆய்வு செய்ய நாங்கள் எந்த தனிப்பட்ட நடவடிக்கையும் எடுக்கவில்லை. நீதிமன்ற உத்தரவு படி செயல்படுவதில் எங்களுக்கு ஆட்சேபணை இல்லை.

**குறுக்கு விசாரணை முடிக்கப்பட்டது மறுவிசாரணை இல்லை.**

**ஒம்./–எல்.கலைவாணி,பி.எ.,பி.எல்.,**
**சார்பு நீதிபதி,**
**தேன்கனிக்கோட்டை.**